**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No. 390/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 2 |
| Name | : | ஜோஸ், வயது 37 |
| Father Name/Husband Name | : | சுகிதன் |
| Village | : | பாளையங்கோட்டை |
| Taluk | : | திருநெல்வேலி |
| Calling | : | தனியார் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of October 2025.

**(Accused present).**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது பாளையங்கோட்டையில் வசித்து தனியார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 07.11.2024 ஆம் தேதி காலை சுமார் 04.30 மணியளவில் நான் மதுரையிலிருந்து திருநெல்வேலிக்கு வரும் அரசு பேருந்தில் கோவில்பட்டி பைபாஸ்ஸில் வந்து கொண்டிருந்தபோது நான் தூங்கி கொண்டிருந்த சமயத்தில் திடீரென்று முன்னாடி ஒரு லாரியின் பின்னால் இடித்தது போல் இருந்ததது.

2 அதில் எனக்கு இடதுபக்க தாடையில் முன்பக்க சீட் இடித்து காயம் ஏற்பட்டது. பேருந்தில் இருந்த ஒரு பொண்ணுக்கும் அடிபட்டது. 10 நிமிடத்தில் சம்பவ இடத்திற்கு ஆம்புலன்ஸ் வந்ததது. கோவில்படடி அரசு மருத்துவமனையில் எனக்கு முதலுதவி செய்தார்கள். எனக்கு எட்டு தையல் போட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3. போலீசார் என்னை விசாரிக்கும்போது நான் சம்பவம் நடந்தபோது தூங்கி கொண்டிருந்ததாக சொன்னீர்களா என்றால் சொன்னேன். எனக்கு முன்னால் சென்ற வாகனம் நின்று கொண்டிருந்ததா, சென்று கொண்டிருந்ததா என்று எனக்கு தெரியாது என்று போலீசாரிடம் சொன்னேன். மேற்படி சம்பவம் தொடர்பாக மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னிடம் கையொப்பம் எதுவும் பெறவில்லை.

4. அரசு பேருந்தை ஓட்டிய ஓட்டுனரின் விவரங்கள் போலீசார் சொல்லிதான் எனக்கு தெரியுமா என்றால் பேருந்தை ஓட்டிய நபர் யார் என்றே

எனக்கு தெரியாது, காலை நேரம் என்பதால் நான் பார்க்கவில்லை. போலீசார் விசாரணையில் மேற்படி விவரங்களைதான் நான் கூறினேன்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.